**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
2. நெடில் எழுத்துகளில் எந்த எழுத்துகளுக்கு இனமான குறில் எழுத்துகள் இல்லை?
3. உயிர்மெய் நெடில் எத்தனை அளவு மாத்திரை கொண்டது?
4. வருக்க எழுத்துகள் என்றால் என்ன?
5. எழுத்தொலிகள் பிறக்க தொல்காப்பியர் எத்தனை உறுப்புகள் தேவைப்படுவதாகக் கூறுகிறார்?
6. இடையின மெய்களை நன்னூல் எவ்வகையில் பிரித்துக் கூறுகிறது?
7. பதம் என்றால் என்ன?
8. இடைநிலை என்றால் என்ன?
9. புணர்ச்சியில் நிலைமொழி என்பதைத் தொல்காப்பியர் எவ்வாறு சுட்டுகிறார்?
10. மொழிக்கு இறுதியில் வல்லின மெய்கள் வருமா?
11. முச்சுட்டு என்று கூறப்படுவன யாவை?
12. கிழக்குத்திரையை குறிக்க வழங்கும் வேறுசொல் யாது?
13. வேற்றுமைப்புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ணகர, நகரங்கள் எவ்வாறு திரியும்?

14. கீழ் என்ற சொல்லின் முன் வல்லினம் எவ்வாறு வரும்?
15. நன்னூலார் காலத்தில் இருதிணைக்கும் பொதுவான முன்னிலைப் பன்மைப்பெயர் யாது?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மாத்திரை குறித்து விவரிக்க.
2. மொழி இறுதி எழுத்துகள் குறித்து விளக்குக.
3. எழுத்தொலி பிறக்க ஒத்துழைக்கும் உறுப்புகள் யாவை? விளக்குக.
4. பெயர்ப்பகுபதங்கள் குறித்து எடுத்துரைக்க.
5. அல்வழிப் புணர்ச்சி குறித்து கூறுக.
6. ஆகார ஈற்றுச் சிறப்பு விதிகளைச் சான்றுகளுடன் விளக்குக.
7. மகர ஈற்றுப் புணர்ச்சியின் பொதுவிதிகளை எடுத்துரைக்க.
8. சாரியை என்றால் என்ன? விளக்குக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) எழுத்தின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மெய்மயக்கம் குறித்துச் சான்றுகளுடன் விளக்கியுரைக்க.

2. (அ) எழுத்துப் பிறப்பில் தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஓர் எழுத்து ஒரு மொழி, தொடர் எழுத்து ஒரு மொழி குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

3. (அ) புணர்ச்சி குறித்து விளக்கி அதில் உயிர் ஈற்றுப் புணர்ச்சியின் சிறப்பு விதிகளைச் சான்றுகளுடன் தந்துரைக்க.

(அல்லது)

(ஆ) அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் மிகும் இடங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

❋ ❋ ❋